Registered as a Newspaper

அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
நவீனமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

இதழ்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மாசி மீ உ 20 புதன்கிழமை துல்ஹி 1407 றஜப் பிறை 3 (04-03-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY விலை 83

தமிழர் மீதான கொடுமைகள் தொடரும் வரை

மத்தியஸ்தம் நிறுத்தம்

ராஜீவ் நேற்று லோக சபையில் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 4

இலங்கைத் தமிழர் மீதான கொடுமைகளை இலங்கை அரசு நிறுத்தும்வரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான மத்தியஸ்த முயற்சியை இந்திய அரசு மீண்டும் ஆரம்பிக்காது

பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்

ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதம் நேற்று ஆரம்பமானபோது இலங்கைத் தமிழர் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பிரதமர் காந்தி பதிலளித்துப் பேசினார்

அப்போது அவர் சொன்னதாவது:

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும். இதை இந்தியா, இலங்கைக்கு அறிவித்துவிட்டது

ஜனாதிபதி ஜெயவர்த்தனவிற்குகடைசியாக நான் அனுப்பியசுடிதத்தில் பிள்ளைகள் இலங்கையில் வன்முறைகள் குறைந்து இருந்தாலும் அது எமக்கு திருப்தி அளிப்பதாக இல்லை.

இலங்கைத் தமிழர் கொடுமைகள் குறைவாவது எமக்குப் பெரும் வேதனையைத் தருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வன்முறைகள் வழிவகுக்கா என்று இலங்கைக்கு அழுத்தந் திருத்தமாக நாம் கூறிவிட்டோம்.

டிசம்பர் 19இல் சில யோசனைகளைச் சமர்ப்பித்த பின்னர் இலங்கை அரசு வேதனை தரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது துரதிஷ்டவசமானது.

இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (இ-எ)

பிரிட்டனில் தஞ்சம் கோரிய

27 தமிழர்களுக்கு சித்திரவதைக் காயங்கள்

வைத்திய சோதனை மூலம் ஊர்ஜிதம்

லண்டன், மார்ச் 4

கடந்த மாதம் லண்டன் விமான நிலையம் போய் இறங்கிய 64 இலங்கைத் தமிழர்களில் 27 பேரின் உடல்களில் சித்திரவதைக் காயங்கள் காணப்படுகின்றன. டாக்டர்கள் அவர்களைப் பரிசோதனை செய்தனர். அப்போது அதிகம் சொன்ன விவரங்கள் அவர்களின் உடலில் காணப்படும் காயங்களுடன் ஒத்துப்போவதாக இருக்கக் காணப்படுகின்றன.

64 தமிழரின் சார்பாக ஆஜராகி வாதிடும் சட்டத்தரணி டேவிட் பேர்ஜஸ் நேற்று பி. பி. சி.க்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இலங்கையில் இவை அவர்களுக்குஏற்பட்டன. சில அதிகாரிகள் உளரீதியிலான சித்திரவதையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார்

"இத்தமிழர்கள் லண்டன் விமான நிலையத்தில் காற்சட்டைகளைக் கழற்றி ஆர்ப்பாட்டஞ் செய்தனர். இதனை அனுமதிப்பதின் இன்னும் அதிகம் நாட்டுக்குள்வரவேற்பதாகவே முடியும்" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் சட்டத்தரணி டேவிட் பேர்ஜஸ் சொன்னதாவது:-

அப்படிச் சொல்லக் கூடாது. ஐ. நா. அகதிகள் சாசனத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் பிரிட்டனும் ஒன்று. அகதிகள் அந்தஸ்து கோருபவர்களின் விண்ணப்பங்கள் நாட்டில் உள்ள நடைமுறைப்படி விசாரிக்கப்பட வேண்டும். உண்மையான அகதிகளை நாம் ஏற்க வேண்டும்.

பிரிட்டனின் ஆடிவரவுச் சட்டங்களின் கீழ் நாட்டுக்குள் வந்தவர்களை மீளச் சேர்வதே மிகக் கஷ்டமான காரியம். அதனால் (4 ஆம் பக்கம் பார்க்க)

கல்லூரிகளில் முகாமிடுவதற்கு ராணுவம் திட்டம்

கேந்திர இடங்களில் உள்ளவை படம் பிடிப்பு

— அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கேந்திர இடங்களில் உள்ள பாடசாலைகளில் முகாமிடுவதற்கு இராணுவத்தினர் திட்டம் இட்டிருப்பதாக அறிய வருகிறது.

இதற்கெனப் பாடசாலைகளின் பெயர்ப்பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றை வானத்திலிருந்து படம் எடுத்து வருவதாகவும் அறியவந்துள்ளது.

குடாநாட்டிற்கு உள்ளேமுன்னேறும் திட்டத்தில் கேந்திர இடங்களில் உள்ள பாடசாலைகளில் தான் கொண்டு முகாம் அமைப்பதே இராணுவத்தினரின் முதற்படி என்று அறியவருகிறது.

அதனும் முதலில், இப்போதுள்ள முகாம்களுக்கு அருகில் கேந்திர இடங்களில் உள்ள பாடசாலைகளில் மினி முகாம்களை அமைக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

மினி முகாம் அமைக்கக்கூடிய பாடசாலைகளின் ஒன்றை இராணுவ அதிகாரிகள் தயாரித்து. மேலிடத்தின் அனுமதியைப் பெற்றிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

அந்தப் பாடசாலைகளை இப்போது படையினர் ஹெலிக்கொப்டரில் இருந்தும் சிறியேனில் இருந்தும் படம் எடுத்து வருவதாக அறியவந்துள்ளது.

யாழ்ப்பாண நகரில் உள்ள இரண்டொரு பாடசாலைகளும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பாடசாலைகளில் மினி முகாம் அமைக்கும் திட்டத்தின் ஆரம்பக்கட்டமாகவே தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மீதான வைகப்பட்டுள்ள சனிக்கிழமை இராணுவத்தினர் வலிவடக்கில் முன்னேற முயற்சித்தனர் என்று சொல்லப்படுகிறது. (இ-10)

ஹெலிமூலம் சிப்பாய்கள் குவிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ் கோட்டை, மண்டைதீவு இராணுவ முகாம்களுக்கு நேற்று நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் ஹெலிகொப்டர் மூலம் கொண்டு வரப்பட்டனர்.

நேற்றுக் காலை முதல் மாலை வரை ஹெலிகொப்டர் பலாலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சிப்பாய்களை ஏற்றி இறக்கும் பணியில் பல நடவைகள் ஈடுபட்டது

மண்டைதீவு இராணுவ முகாமுக்குக் கொண்டுவரப்பட்ட சிப்பாய்கள் சுவச வாகனங்கள் மூலமும் டிரக்குகள் மூலமும் யாழ் கோட்டைக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்

(இ-10)

இராணுவ-- மக்கள் வங்கி அதிகாரிகள்:

திட்டமிட்டபடி நேற்று சந்திப்பு நடக்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச்4

அடகு வைத்தோரின் நகைகளைத் திருப்பிக் கொடுப்பது சம்பந்தமான அட்டவணை ஒன்றைத் தயாரிக்க மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளரை எதிர்பார்த்து பலாலி இராணுவ முகாமில் கப்டன் மஜீத் நேற்று மாலை வரை காத்து இருந்தார்.

பிராந்திய முகாமையாளர் வவுனியாவில் இருந்து நேற்று மாலை வரை வந்து சேரவில்லை என்று கூறப்பட்டது

அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளளிப்பது தொடர்பாக யாழ் அரச அதிபர் திரு. வி. எம் பஞ்சலிங்கம் கொழும்பு மேலிடத்துடன் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சியைத் தொடர்ந்தே நேற்றைய சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேனால ஆட்டிகல வடமாகாண இராணுவ இணைப்பதிகாரிக்கு விடுத்த பணிப்புரையைத் தொடர்ந்தே கப்டன் மஜீத்- வடபிராந்திய முகாமையாளர் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

நகைகளை மீளளிப்புச் செய்வது சம்பந்தமான அட்டவணையுடன் பிராந்திய முகாமையாளரின் வாகனையை கப்டன் மஜீத் எதிர்பார்த்து இருந்தார்.

நகைகளை மீளளிப்புச் செய்வது பற்றிய நடவடிக்கைகளை மேற்கொண்ட எனது பணி, இச்சந்திப்புக்கு ஏற்பாடு செய்ததுடன் முடிவு அடைந்து விட்டது என்று யாழ் அரச அதிபர் திரு. பஞ்சலிங்கம் தெரிவித்தார். (இ-எ)

செயலக மறியலால்

ஏப்ரல் ஓய்வூதியமும் தாமதமாகும்

16,600 ஓய்வூதியர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ் குடாநாட்டில் உள்ள 16,600 ஓய்வூதியர்களுக்கு இம்மாத ஓய்வூதியமும், ஏப்ரல் மாத ஓய்வூதியமும் உரிய காலத்தில் வழங்கப்படுவதில் தாமதம் ஏற்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. செயலக மறியல் காரணமாக அரச ஊழியர்கள் வேலைக்குச் செல்லவில்லை.

இதனால் மார்ச் மாத ஓய்வூதியம் வழங்குவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. இக்காரணத்தினால்தான் மார்ச் ஓய்வூதியம் உரிய நேரத்தில் வழங்கப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏப்ரல் மாத ஓய்வூதியத்துக்கான எக்கருமமும் மேற்கொள்ளப்படவில்லை.

இது சம்பந்தமான தகவல் கொழும்புக்கு முதலில் அனுப்ப வேண்டும். கொழும்பில் இருந்து தேவையான திருத்தங்களுடன் அவை கிடைத்தவுடன் மீண்டும் ஒருதரம் அவற்றை கொழும்புக்கு அனுப்பிச் சம்மதம் பெற வேண்டும் அதன் பின்னரே கம்பியூட்டர் மூலம் ஓய்வூதியப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு முறையும் கொழும்புக்கு தகவல்களைப் பெற பத்துத் தினங்களுக்கு மேலாகும்.

ஆகவே ஏப்ரல் மாத ஓய்வூதியத்தை ஏப்ரல் புதிதாண்டுக்கு முன்னர் எழுதிப் பட்டியலிட்டு சாத்தியக் கூறுகள் இல்லை என்று யாழ் அரச அதிபர் திரு. வி.எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

ஓய்வூதியர்களுக்கு இதனால் ஏற்படும் கஷ்டங்களுக்கு வருந்தும் தெரிவித்த அரச அதிபர் திரு. (4ஆம் பக்கம் பார்க்க)

பேச்சுக்கு வரும்வரை இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட மாட்டாது

தமிழக அறிஞருக்கு ஹமீத் பதில்

சென்னை மார்ச் 4

வன்செயல்களை நிறுத்தி பேச்சுக்களுக்கு போராளிகள் வரும் வரை இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட மாட்டாது என்று வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது தமிழக அறிஞர்களுக்குப் பதிலளித்துள்ளார்.

வடபகுதி மீதான எறிகணைத் தாக்குதல்களையும் நிறுத்தி பேச்சுக்களைத் தொடங்க வேண்டும் என்று தமிழக அறிஞர்கள் சிலர் அறிக்கை ஒன்றின் மூலம் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கு முகமாகவே அமைச்சர் ஹமீது இப்பதில் அனுப்பி இருக்கிறார் என்று அறிக்கையில் கையொப்பம் இட்டவர்களில் ஒருவரான திரு. ராஜமோகன் காந்தி தெரிவித்தார்.

இதே வேளை யோராளிகள் வன்செயல்களைக் கைவிடாத வரையில் புதிய பேச்சுக்களுக்கான வாய்ப்பு இல்லை என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவும், தன்னைச் சந்தித்த சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்காவிடம் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் "மெடிக்கோஸ் வீக்" வைபவம் வடபுலத்தின் "மெடிக்கோஸ் வீக்" வைபவம் வடபுலத்தின் நிதி நிறுவன ஆதரவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பிரதம விருந்தினர் டாக்டர் ஆர். கணேசமூர்த்தி உரையாற்றுவதையும், திருமதி கணேசமூர்த்தி மேடையில் விற்றிருப்பதையும் – பார்வையாளர் முன் வரிசையில், துணைவேந்தர் பேராசிரியர் க. விநாதியானந்தன், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் வி சிவஞானசுந்தரம், யாழ் போதனா வைத்தியசாலை இயக்குநர் டாக்டர் சு. நல்லநாதன், கிளிநொச்சி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

கொழும்பில் இருந்து இரவுச் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் கொழும்பில் இருந்து இரவு நேரத்திலேயே யாழ்ப்பாணம் திரும்பும்

இந்த பஸ் பகல் நேரத்தில் கொழும்பில் இருந்து சேவையில் ஈடுபடமாட்டாது (4 ஆம் பக்கம் பார்க்க)

★ பஸ்ஸிலிருந்து விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

பஸ்ஸின் மிதிபலகையில் நின்று வாந்தி எடுத்தவர் தவறி விழுந்து மரணமானார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த முகமது அபாஸ் சதாத்துல்லா (26 வயது) என்பவரே இறந்தவர் ஆவார் (இ-10)

செயலக மறியலால்

இலங்கைத் தமிழர் எவரும் இந்தியாவில் குடி அமர்த்தப்படார்

புதுடில்லி, மார்ச் 4

அகதிகளாக வந்த இலங்கைத் தமிழர் இந்தியாவில் குடியமர்த்தப்படமாட்டார்கள்

இந்திய உள்துறை இணை அமைச்சர் சித்தாமணி பாணிக்கிரஹி நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் இப்படிச் சொன்னார்.

சென்ற மாதம் 15ஆம் திகதிவரை கடந்த மூன்றாண்டுகளில் இலங்கையில் இருந்து 1 லட்சத்து 88 ஆயிரத்து570 இலங்கைத் தமிழர் அகதிகளாக இந்தியா வந்தனர்

அந்தப் பேரும்மீண்டும் இலங்கை திரும்ப வேண்டியவர்கள்

இலங்கையில் அமைதி, சகஜநிலை, நிம்மதி, பதிரமாக வாழும் சூழ்நிலை ஏற்பட்டவுடன் இவர்கள் திருப்பி அனுப்பப்படுவர்.

இப்படி இணை அமைச்சர் சித்தாமணி பாணிக்கிரஹி தெரிவித்தார். (இ-எ)

வியாழன் மலர்

04—03—1987
புதன்கிழமை

சுபநேரம்:
4-57 முதல் 6-27 வரை
ராகுகாலம்:
12-27 முதல் 1-57 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

முச்சந்தி மூளி

கடைசியாய் இந்திய மத்தியஸ்தமும் நின்று போய்ச்சு. இனி அடுத்தது பெரிய அடி பிடியேய...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

வீட்டுக்கைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் வீடு வாடகைக்கு உள்ளது பழைய இலக்கம் 384/2, புதிய இலக்கம் 728 தொடர்பு: யோ. ஆ இராசரத்தினம் இலக்கம்: 386, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

திருமலையிலிருந்து கும்புறுபிட்டிவரை ஆறு முகாம்கள்!

ஏராளமான காடுகள் அழிப்பு

திருகோணமலை, மார்ச். 4

திருகோணமலை நகரில் இருந்து கும்புறுபிட்டி வரை ஆறு ஆயுதப் படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடைசியாக இறக்கண்டியில் ஆயுதப்படை முகாம் அமைக்கப்பட்டது.

இறக்கண்டிக்கு அப்பாலே ஏராளமான காடுகள் புல்டோஸர் பாவித்து படையினரால் அழிக்கப்பட்டுள்ளன.

நிலாவெளி, கோபாலபுரம், இறக்கண்டி, கும்புறுபிட்டி ஆகிய பகுதிகளில் இரவு பகலாக இராணுவ நடமாட்டம் காணப்படுகிறது.

நிலாவெளி மகா வித்தியாலயத்திலும் இராணுவ முகாம் உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் பலர் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து திருமலை நகருக்கு வந்துள்ளனர்.

3 ஆம் கட்டை, சாம்பல்தீவுச் சந்தி, நிலாவெளி, இறக்கண்டி, கும்புறுபிட்டி ஆகிய இடங்களில் படை முகாம்கள் இயங்கி வருகின்றன.

(இ-எ-150)

இளைப்பாறினார்

ஓட்டுத்தனை மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. வ. செல்வமுத்து இளைப்பாறினார்.

இப்பாடசாலையின் புதிய அதிபராக திரு எஸ் மாணிக்கவாசகர் நியமிக்கப்பட்டார்

(இ-157)

பல பாடசாலைகள்

திங்களன்று இயங்கவில்லை

பலாலி, மார்ச் 4

திங்களன்று தெல்லிப்பளை, கட்டுவன், வீமன்காமம் பகுதிகளில் பாடசாலைகள் எதுவும் இயங்வில்லை.

தெல்லிப்பளையில் பிரபல்யமான பாடசாலைகளான யூனியன் கல்லூரி, நற்றா செல்வா, தொடக்கநிலைப் பள்ளி, சைவப்பிரகாச வித்தியாசாலை, வறுத்தலைவிளான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வீமன்காமம் மகா வித்தியாலயம் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம், குரும்பசிட்டி பொன் பரமானந்தா மகா வித்தியாலயம், கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் ஆகிய வையே திங்கள்று இயங்கவில்லை

மகாஜனக் கல்லூரியிலும் மாணவர்கள் மிகக் குறைவாகவே வந்திருந்தனர்.

(இ-119)

பன்னிருவர் கைது!

திருகோணமலை, மார்ச் 4

கந்தளாய்- பேராற்றுவெளி கிராமத்தில் கடந்த 18 ஆம் திகதி அதிகாலையில் நடத்தப்பட்ட தேடுதலில் பன்னிரண்டுபேர் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

வீட்டில் நித்திரையில் இருந்தவர்களைத் தட்டி எழுப்பியே படையினர் கைது செய்தனர் என்று பிரசைகள் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது. (உ-எ-150)

ரூ. 625 இலட்சம் பெறுமதியான சொத்தை அரசு சுரண்டத் திட்டமா?

அடகு வைத்தோர் சங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச். 4

தமிழ் மக்களின் 625 லட்சம் ரூபா பெறுமதியான சொத்தை அரசு சுவீகரித்து, சுரண்டத் திட்டமிட்டுள்ளதா?

இவ்வாறு அடகு வைத்தோர் சங்கக் கூட்டம் யாழ்ப்பாணம், மார்ச் 4 அடகு வைத்தோர் சங்கத்தின் முக்கிய கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை காலை 11 மணிளவில் யாழ் செயலக முன்பாக நடைபெறும்.

பாதிக்கப்பட்ட சகலரையும் சமுகமளிக்கும்படி அடகு வைத்தோர் சங்கம் கோரி உள்ளது.

(இ)

அடகு வைத்தோர் சங்கப்பிரதிநிதிகள் ஒர் அறிக்கையில் கேட்டுள்ளனர்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

அரசு நகைகளை மீள ஏலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும், சம்பந்தப்பட்ட வங்கி நிர்வாகத்தினைமைப்பிடம் அதற்கு உடன்பட மறுப்பதாகவும் தெரியவருகிறது.

இக்கூற்று உண்மையாயின் சம்பந்தப்பட்ட அமைச்சு வங்கி, நிர்வாகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதன் மூலம் நிலைமையைச் சீராக்க வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(இ-5)

ஞாயிறு சம்பவத்தின் போது 50க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்

3,000 பேர் இடம் பெயர்வு

பலாலி, மார்ச் 4

ஞாயிறுபிற்பகல் மூன்று மணியளவில் இருந்து பலாலி முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களும் ஹெலிக்கொப்டர் தாக்குதலாலும் 50 க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

கட்டுவன், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், நிடற்புலம், மல்லாகம், வீமன்காமம் பகுதிகளிலும் வறுத்தலைவிளான் பகுதிகளிலுமே சேதங்கள் ஏற்பட்டன.

இதனை அடுத்து சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்தனர்.

இடம் பெயர்ந்த மக்கள் கல்லூரி, இணுவில், பகுதிகளுக்கும் அளவெட்டிக்கு அப்பாலும் உறும்பிராய்ப் பகுதிகளுக்கும் சென்றுள்ளனர்.

சுமார் 30க்கு மேற்பட்ட ஷெல்கள் தொடர்ச்சியா தெற்கு, தெற்கேமேற்குப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன.

(இ-119)

மற்றொருவர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 4 கடந்த ஞாயிக்கிழமை கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களின் போது காயமடைந்திருந்த மற்றொருவர் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த வேலன் ராஜன் (42 வயது) என்பவரே மரணமானவராவார்.

(உ-10)

மா, சீனி விற்பனைக்கு இல்லை என்கிறார்கள் யாழ் வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ் குடாநாட்டில் சந்தையில் அரிசி, மா, சீனி என்பனவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

உணவுப் பொருள்கள் வடபகுதி உணவுத் திணைக்களத்திடம் போதியளவு கையிருப்பில் இருந்தும் அவற்றை வெளியில் சந்தைக்கு விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டதாலேயே இந்தப் பற்றாக்குறை உருவாகியுள்ளது.

உணவுத் திணைக்களம் இயங்க முடியாதுள்ளது.

இதனால் கையிருப்பில் உள்ள உணவுப்பொருள்களை குறிப்பாக அரிசி, மா, சீனி ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிக்க முடியாமல் இருப்பதாக அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தனியார் வர்த்தகர்களிடம் அனேகர் ப.நோ.கூ. சங்கங்களிடையிருந்தே மாவையும் சீனியையும் வாங்கிவருவது உண்டு.

சந்தையில் அவை இரண்டும் இல்லாததால் கடைக்காரர்கள் தமிடம் மா, சீனி இல்லை என்று வாடிக்கையாளரிடம் கூறுகிறார்கள்

(உ-10)

ஷெல்லினால் பாடசாலை வீடுகள் சேதம்

பலாலி, மார்ச் 4

வயாவிளான் இராணுவ முகாமில் இருந்து ஞாயிறு இரவு ஏவப்பட்ட ஷெல் தோலகட்டி, ஒட்டகப்புலம் பகுதிகளில் விழுந்து வெடித்ததனால் ஒரு பாடசாலை உட்பட மூன்று வீடுகள் சேதம் அடைந்தன.

ஒட்டகப்புலம் ரோ. க. த. க. பாடசாலையே சேதம் அடைந்த பாடசாலை ஆகும்.

மரத்தில் விழுந்து வெடித்த ஷெல்லினால் பாடசாலை ஓடுகள் பல உடைந்தன.

அவ்விடத்தில் நின்ற யோசேப் என்பவர் காயமடைந்தார்.

அடிக்கடி ஒட்டகப்புலப் பகுதியை நோக்கி ஏவப்படும் ஷெல்லினால் அப்பகுதி மக்கள் அச்சவேவிய நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

(இ-118)

மக்கள் முகம்

அறவழிப் பாலர் கழக அ.பி.சபை

தனங்கிளப்பு ரோமத்தில் பண்டிதமணி திரு. சி. நிலவாக நிறுவப்பட்ட அறவழிப்பாலர் பழக அபிவிருத்திச்சபையின் கூட்டத்தை ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா நடத்தி வைத்தார்.

அறவழிப் போராடுடக் குழுவின் கல்விப் பணிப்பொறுப்பாளர் திரு ஜி எஸ் தங்கராசாவின் சிறப்புரையை அடுத்து நடைபெற்ற உத்தியோகத்தர் தெரிவில் திரு க. சிவப்பிரகாசம் தலைவராகவும் செல்வி எஸ். இராசேஸ்வரி செயலாளராகவும் திரு. வி. நமசிவாயம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-31)

மானிப்பாய் வட்டார உள்ளூர் ஆசிரியர் இடமாற்ற விவரம்

மானிப்பாய், மார்ச் 4

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்டுள்ள மானிப்பாய் வட்டார உள்ளூர் ஆசிரியர் இடமாற்ற விவரங்கள் வருமாறு:-

1. திரு ச. வேலும்மயிலும் பி எஸ்.சி (ஏழாலை மகா வித்தியாலயம்)கல்லூரி.

2. திருமதி ம. சிவசிதம்பரவிநாகம் விசேட பயிற்சி விஞ்ஞானம் (ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்) கல்லூரி.

3. திருமதி சி. ஜி. செல்வத்துரை, விசேட பயிற்சி ஆங்கிலம் (உடுவில் மாதர் த.க பாடசாலை) உடுவில் மாதர் மகா வித்தியாலயத்துக்கு 3 நாள், உடுவில் மாதர் த.க. பாடசாலைக்கு 1 நாள்.

4 திருமதி ச. கந்தசாமி. பொதுப் பயிற்சி (உடுவில் அ. மி. த. க. பா.) உடுவில் மாதர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு.

5. திரு. தி. விஜயநாதன், பயிற்சி ஆங்கிலம் (சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை) சங்குவேலி அ.த.க பாடசாலைக்கு 3 நாள், ஆனைக்கோட்டை அ மி த க. பாடசாலைக்கு 1 நாள்.

6. திரு க. ஸ்ரீஸ்காந்த ஆங்கில விசேட பயிற்சி (ஆனைக்கோட்டை அ. மி த க.பா. 3 நாள், கதுமலை அ.த.க.பா. 2 நாள்) கதுமலை சிம்மபாரதி வித்தியாலயத்துக்கு 3 நாள் கதுமலை அ த.க. பாடசாலைக்கு 2 நாள்.

7. திரு. க. காயாரோகணம், பயிற்சி ஆரம்பக் கல்வி (ஆனைக்கோட்டை அ.மி.த.க. பா.) புதுமடம் ரோ. க. த.க. பாடசாலைக்கு.

8. செல்வி செ. ஜெ. மண்டலநாகம், விசேட பயிற்சி ஆங்கிலம் (மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை) மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு 3 நாள், மானிப்பாய் விவேகானந்தாவுக்கு 2நாள்.

9. திருமதி பெ. வேராயிரம்பிள்ளை, விசேட பயிற்சி நெசவு (ஏழாலை ம.வி, 3 நாள், தாவடி இந்து த.க.பா. 2 நாள்) ஏழாலை மகா வித்தியாலயத்துக்கு முழு நாளும்.

(தொடரும்)

ரேகன் குடும்பம் கொலைக்கும் எமக்கும் சம்பந்தம் கிடையாது

ஈ. பி. ஆர். எல். எவ் கூறுகிறது

மட்டக்களப்பு, மார்ச் 4

வெல்லாவெளிப் பிராந்திய புலிகளின் தளபதி ரேகனின் குடும்ப உறுப்பினர்கள் கொலைக்கும் தமது இயக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென தெரிவித்துள்ள ஈ. பி ஆர். எல். எவ். இயக்கம் இக் கொலைகளை வன்மையாகக் கண்டித்து அறிக்கை விடுத்துள்ளது

ரேகனின் தாய், சகோதரன், சகோதரி, மனைவி பிள்ளைகள் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

கொல்லப்பட்ட தமிழ் பேசிய கோஷ்டி ஒன்றினால் காட்டுமிராண்டித் தனமாக வெட்டியும் சுட்டும் அவர்கள் கொலை செய்யப்பட்டனர்

இக்கொலைகளை புரிந்த கோஷ்டி ஈ. பி ஆர். எல். எவ் இயக்கம் என உரிமை கோரும் சுவரொட்டிகளையும் கொலைகாரர்கள் அங்கு ஒட்டி விட்டுச் சென்றிருந்தனர்.

இக் கொலைகளுக்கும் ஈ. பி ஆர் எல் எப் இயக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை விளக்கும் அறிக்கையை இயக்கத்தின் மட்டக்களப்பு பிராந்தியம் வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

வெல்லாவெளி பகுதி புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ரேகனின் குடும்பம் படுகொலை செய்யப்பட்டது திட்டமிட்ட செயல் ஆகும்.

மக்களை எம்மிடமிருந்தும், விடுதலையிலிருந்தும் அந்நியப்படுத்தும் காட்டுமிராண்டித் தனமான இக்கொலைகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இறந்தவர்களுக்கு எமது அஞ்சலியைத் செலுத்துகின்றோம்

விடுதலைப் புலிகளுடன் எமக்கு மோதல்கள் ஏற்பட்டாலும் ஒன்றுமறியாத அப்பாவிப் பொது மக்கள் மீது நாம் எச் சந்தர்ப்பத்திலும் ஆயுதங்களைப் பிரயோகிப்பதில்லை

இதே நேரத்தில் மக்களுக்காகப் போராடும் இயக்கங்கள் என்ற ரீதியில் மக்கள் மத்தியில் நடமாடும் சக்திகளின் அம்பாறை சிங்கள மக்கள் மீதான படுகொலைகளையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது

(இ-84-31)

இளநீர் பிடுங்குவித்து குடித்த பின்னர் இளைஞர்களை கட்டுக் கொன்றனராம்!

மட்டக்களப்பு, மார்ச் 4

வாழைச்சேனையில் ஏற்றி இளநீர் பிடுங்கி குடித்த பின்பு படையினர் அவர்களைச் சுட்டுக்கொன்று சடலங்களை லாரியில் ஏற்றிச் சென்றனர்.

இச்சம்பவம் வந்தாறுமூலையில் அண்மையில் நடைபெற்றது.

கே சோமசேகரன் (27 வயது) கே சோமலிங்கம் (21 வயது) அடையாளம் காணப்படாத ஒருவர் ஆகியோர்தான் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

தேடுதலில் கைதாகிய இம்மூவரும் தென்னம் தோட்டம் ஒன்றுக்கு அழைத்து செல்லப்பட்டுதான் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வந்தாறுமூலை பிரசைகள் குழு. ஆயுதப் படை இணைப்பு அதிகாரியிடம் இது தொடர்பாப் புகார்கூறியுள்ளது. (இ-31)

கொக்கட்டிச்சோலையிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் இன்னும் சொந்த இடம்திரும்பவில்லை

கல்முனை, மார்ச் 4

ஆயுதப்படையினரின் தாக்குதல்களை அடுத்து கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்திலிருந்து நாவற்கேணி, தும்பங்கேணி, காந்திபுரம், திக்கோடை, கரடியனாறு, 40 ஆம் கொலனி, 39 ஆம் கொலனி ஆகிய கிராமங்களில் தஞ்சம் புகுந்த ஆயிரக் கணக்கான தமிழர்கள் இன்னும் தமது பழைய இடங்களுக்குத் திரும்பவில்லை.

அறுவடைக் காலமாகிய தற்போது நெல்லு நெற்பயிர்களை அறுவடை செய்யமுடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

பாதுகாப்புப் படையினரின் அடாவடித்தனங்கள் அப்பகுதியில் அதிகரித்துள்ளதே இதற்குக் காரணம்.

பாதிக்கப்பட்டுள்ள இவர்களுக்கு அண்மையில் நவகிரி, மண்டூர், பழுகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும், முனைதீவு கிராம அபிவிருத்தி மன்றமும், பழுகாமம் திருக்குறள் முன்னணிக் கழகமும் 'அரிசி' மாவு போன்ற உணவுப்பொருள்களை மாட்டு வண்டிகள் மூலம் காட்டுப்பகுதியினூடாக ஏற்றிச் சென்று வழங்கின.

அதேசமயம் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் உள்ள பாடசாலைகள், வைத்தியசாலைகள், உதவி அரச அதிபர் காரியாலயம் என்பன இன்னும் இயங்கவில்லை.

அதுதவிர அரசியற் தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் இயங்க முடியாத நிலையிலுப்பாக அப்பகுதி மக்கள் உணவு முத்திரைக்கான நியாரணமும் பெறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது (இ-84)

அகதிப்பெண் மானபங்கம் 5 இராணுவத்தினர் கைது

தோப்பூரில் சம்பவம்

திருகோணமலை, மார்ச். 4

அகதி முகாமில் உள்ள தமிழ் இளம் பெண் ஒருத்தி மானபங்கப் படுத்தப்பட்டது தொடர்பாக ஐந்து இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்

மூதூர்த் தொகுதியில் தோப்பூர் அகதி முகாமில் வசித்து வரும் ஓர் இளம் பெண்ணே இது சம்பந்தமாக பிரசைகள் குழுவிடம் முறைப்பாடு செய்து இருந்தார்.

இரவு சுமார் 10 மணி அளவில் இப் பெண்ணை ஆயுதப்படையினர் இழுத்துச் சென்று மானபங்கப்படுத்தினராம்

கைது செய்யப்பட்டுள்ள 5 இராணுவத்தினரும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர் முறைப்பாட்டுக்காரப் பெண்ணினால் எவரையும் அடையாளம் காட்ட முடியாதபோயிற்று

இதனிடையில் தோப்பூர் படை முகாமில் உள்ள சிப்பாய்கள் அப்பகுதியில் வாழும் பெண்களுக்கு பெரும் தொல்லை கொடுத்து வருவதாக மேலிடத்துக்கு முறையிடப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் படையினர் பெண்களை பலாத்காரமாக இழுத்துச் சென்று மானபங்கப்படுத்துகின்றனர் என்று முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

(உ-எ-150)

நெடுங்கேணிச் சுற்றிவளைப்பில் கோழிகளும் தப்பவில்லை

நெடுங்கேணி, மார்ச்.4

டொலர் பாம், கென்ட் பாம் இராணுவ முகாமில் இருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட சிப்பாய்களும், கறுப்பு சட்டைக்காரரும் நடை பவனியாக வந்து நெடுங்கேணியைச் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்தினர். சென்ற வாரம் இச்சம்பவம் நடந்தது.

இரண்டு ஹெலிகொப்டர்களும் ஒரு சீ பிளேனும் சிப்பாய்களுக்கு உதவியாக வானத்தில் வட்டமிட்ட வண்ணம் இருந்தன.

தண்டுப் பிரகாரங்களும் ஹெலியில் இருந்து வீசப்பட்டன. மக்கள் பயந்து காடுகளில் தஞ்சமடைந்தனர். சிப்பாய்கள் வீடுகளில் கதவுகளை உடைத்து மணிக்கூடு போன்ற பொருள்களையும் பிடித்து சமைத்துச் சாப்பிட்டனர்

மாருதியூப்பை, குளவிகட்டான், வேலங்குளம், குறிசுட்டகுளம் ஆகிய கிராமங்களில் நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவி இளைஞர்களை இவர்கள் கைது செய்தனர்.

நெடுங்கேணி கிராம மோதயசபை தலைவரும் பிரசைகள் குழு செயலாளருமான த.ம. பீற்றர் பொன்கலன்ட் இணைப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அதிகாலை மிகுதிப் பேரை விடுவித்தார்.

(இ-108)

இணைப்பு நடவடிக்கை நிறுத்தம்

அம்பாறை, மார்ச் 4

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலைகளின் நிருவாகத்திற்குப் பொறுப்பாக இயங்கிவரும் கல்முனை மாவட்டக் கல்வி அலுவலகத்தை அம்பாறை கல்விப்பணிப்பாளர் அலுவலகத்துடன் இணைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பிரதிநிதிகள், தற்போதைய தொடர்புகள் அமைச்சர் ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத், பொறுத்துவிட்டு முதல்வர் ஜனாப் எம். ஐ. உதுமாலெவ்வை ஆகியோர் அண்மையில் கல்வி அமைச்சரைச் சந்தித்து இந்த அலுவலக இணைப்பிற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர். (இ-14)

பிரயாண ஒழுங்குகள்

● டுபாய் ● ஓமான்
● சவூதி அரேபியா

போன்ற நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் தொழிலாளர்களுக்கு மட்டும் (Labourers only) உடனடியாகச் செய்து தரப்படும்.

பாஸ்போர்ட், 7 படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

கொழும்பு முகவரி:
Construction & Development Ltd.
37, Jeyasingha Mawatthe,
Nugegoda.

கொழும்பு: V. P. பாலா C/o.N.V பொன்னுத்துரை, "திருமகிலம்" பாடசாலை ஒழுங்கை, கொண்டாவில் மேற்கு, கொண்டாவில்.

யாழ்ப்பாண முகவரி: V. P. பாலா இடைக்காடு, ஆக்கவேலி,

வைத்தியம்

சிரங்கு, கடி, தோல்வியாதி, தொய்வு, நீரிழிவு, கட்டிகள், நரம்புத் தளர்ச்சி, உடல்மெலிவு, ஆண்தன்மை குறைவு, இளம்பிள்ளைவாதம், வாதம் அல்லது வேறு அடிபட்ட காரணத்தால் நடக்க முடியாதிருந்தால் குணப்படுத்தலாம்.

வைத்தியர்,
ராஜ் டிஸ்பென்சரி
முல்லைத்தீவு வீதி,
புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

மகனே! வாழ்க்கையில் சந்தோஷம் முடிந்து அந்தகாரம் மூடிக் கொள்ளும் காலம் வரும் அப்போது நிம்மதியைக் காண ஒரு புகலிடம் வேண்டும் கடவுளாகிய விடுதியின் அவசியத்தை உணர்வோமாக!

— ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

உதயன்

இல.15,[illegible]வதுஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 04-03-1987 த.பெ.இல 88

புதிய புத்தி தொடர்க!

இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தையில் பெரும் ஸ்தம்பிதநிலை ஏற்பட்டிருக்கிறது. இலங்கையும் இந்தியாவும் கடிதங்களை மாறிக் கொள்கின்றன. இரு நாடுகளின் தூதுவர்கள் தத்தமது தலைவர்களின் கடிதங்களைத் தாம் பணிபுரியும் தலைநகர்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள்

பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு ஏதுவாக இந்தியா விடுத்த மூன்று அம்சக் கோரிக்கைகளை இலங்கை நிராகரித்து விட்டது.

ஜனாதிபதி ஜே ஆரின் பேச்சும் செயலும் ஒன்றுக்கொன்று முரணானவை அவரின் பேச்சில் நம்பகத் தன்மை குறைவு. அவர் இராணுவ நடவடிக்கையிலேயே அதிக நாட்டம் கொண்டுள்ளார்

அவரின் போக்கைப் புரிந்து கொண்டதைப் பிரதிபலிக்கும் விதத்தில் இந்திய ஜனாதிபதியின் பட்ஜெட் நிதி உரை அமைந்திருந்தது. அதன் மூலம் இலங்கை அரசின் உண்மை நிலை சர்வதேச மட்டத்தில் ஓரளவு புரிய வைக்கப்பட்டுள்ளது

இலங்கையின் இராணுவத் தீர்வு நாடிய உள்நோக்கம் நோக்கம் இந்தியாவுக்கு ஓரளவு கவலையைக் கொடுத்திருக்கிறது தவிர மத்தியஸ்தர் என்று வைத்துக் கொண்டு அவர்களுக்கு தமிழர்களை அழித்தொழிக்கும் கைங்கரியத்தை இலங்கை கச்சிதமாகச் செய்து வருகிறது என்பது இந்தியாவுக்கு நன்கு புலனாகியுமிருக்கிறது. அதனால் தமிழர்களை அழிப்பதில் மறை முகமாகத் தனக்கும் ஒரு பங்கு உண்டு என்று அது உணர்கிறது.

ஆகவேதான் ஒன்றில் மத்தியஸ்தத்தில் இருந்து விலக வேண்டும்; இல்லையேல் இலங்கை அரசுடன் கடும்போக்கைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று அது புதிய வழி நாடி இருக்கிறது போலும்

தமது மூன்று அம்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்னர் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கடந்த மாதம் 27 ஆம் திகதி மந்திராலோசனைக் கூட்டம் நடத்தினார். இலங்கையின் போக்கு இந்தியாவுக்கு எந்தளவு மனத்தாங்கலை உண்டு பண்ணியிருக்கிறது. அதன் போக்கை எவ்வளவுக்குத் தீவிரமடையச் செய்திருக்கிறது என்பதை அந்தக் கூட்டம் எடுத்துக்காட்டியது

அந்த மாநாட்டில் அமைச்சர்கள், செயலாளர்கள் - மட்டுமன்றி புலனாய்வுத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கும் மேலாக திரு. ராஜீவ் காந்தி ஆயப்பிற்கு ஜே. ஆருக்கு அனுப்பிய கடிதத்தில் 'ராஜதந்திரப் பயமுறுத்தல்' அம்சம் பொதிந்திருப்பதாக அறியப்படுகிறது. அந்தக் கடிதத்தில் உள்ள 'DEMARCHE' என்ற சொல் இந்தியாவின் ஆத்திரத்தையும், இவ்விடயத்தில் இனிக் காட்டமாக நடக்கப் போவதையும் உணர்த்துவதாக அர்த்தம் கொள்ளலாம்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்த நான்கு வருடங்களாக வையரண்ட போக்கை மாற்றப் போவதாக எச்சரிப்பதாகவும் அந்தப் பதம் அமைந்திருக்கிறது மத்தியஸ்தத்தில் இருந்து விலகுவது குறித்துக் கவலையில்லை! இனி எமது சொற்படி போக்கில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வரும் என்றும் அந்தப் பதத்திற்கு அர்த்தம் கற்பிக்கலாம்.

இலங்கை இராணுவ நடவடிக்கையைத் தொடரப் போவதாகக் குறிப்பாகக் காட்டியிருப்பது போல. அதற்குச் சமனான ஒரு நடவடிக்கையைத் நாம் எடுக்க வேண்டிவரும் என்பதே அந்த ராஜதந்திரப் பயமுறுத்தல் என்றும் அரசியல் நிபுணர்கள் கருத்துச் சொல்லுகிறார்கள்.

ராஜீவ் கடிதத்தில் உள்ள எட்டெழுத்துச் சொல்தான் திரு ஜே ஆரைப் பெரிதாக ஓடி முழிக்க வைத்திருக்கிறது! அரசியல் கட்சிகள் மாநாட்டின் பின்னர் அவர் முழுக்க மறந்திருந்த தெல்லிலங்கை எதிர்க்கட்சித் தலைவர்களை அவசர அவசரமாக அழைத்து அன்பொழுகப் பேசச் செய்ததும் அந்தப் பதம் தான்!

எது எப்படியோ. இந்தியா இலங்கையுடன் கண்ணாமூச்சி ஆட்டத்தைத் தொடராமல் நிதானமான புத்தியுடன் செயற்படப் போவதாக எடுத்துக் காட்டியிருப்பது தமிழர்களைப் பொறுத்த மட்டில் நல்ல மாற்றமாகும் இந்தியப் பிரதமர் ராஜீவுக்கு உதித்துள்ள புதிய புத்தி அதே சிந்தனை அலையில் தொடர்ந்து செயற்பட வேண்டும். அவ்வாறே நடக்கும் எனவும் நம்புவோமாக.

இந்தியா மத்தியஸ்தத்தில் இருந்து விலகினாலும் இனப்பிரச்சினையில் இருந்து இலகுவில் விடுபட்டுப்போக முடியாது நீண்ட நாள் மௌனம் சாதிக்க இயலாது. இவ்விடயத்தில் அது ஏதோ ஒரு வகையில் ஆப்பிழுத்த குரங்கின் நிலையிலேயே அது இருக்கிறது என்பது உண்மை.

தமிழர்கள் அழித்தொழிக்கப் படுவதை நிறுத்தக் கூடிய ஒரு செயற்பாட்டில் இந்தியா இறங்க வேண்டும். அதனைத் தாமதிக்காமல் செய்வதே நல்லது பொறுப்போர், பக்கவிளைவுகள் என்பனவற்றை மனதிற் கொண்டு காரியங்கள் நடக்க வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை, ஆறிய கஞ்சி பழைய கஞ்சியே தான். இனப்பிரச்சினைக் கஞ்சியை ஆற விட்டால் நலந்த தமிழர்களை இந்தியாவே கொல்வதற்கு ஒப்பாகி விடும்

பெரூஸிற்கு எகிப்து ஆதரவு

கெய்ரோ, மார்ச் 3

இஸ்ரவேல் வெளிநாட்டமைச்சர் பெரஸிற்கும் பிரதமர் ஷாமிருக்குமிடையே தோன்றியுள்ள மனஸ்தாபங்களில் எகிப்து முதற் தடவையாகக் கருத்து வெளியிட்டுள்ளது

மத்திய கிழக்கு சம்பந்தமாக மாநாடு ஒன்று கூட்டப்படவேண்டும் என விரும்பும் இஸ்ரவேல் வெளிநாட்டமைச்சர் பெரஸையே ஆதரிப்பதாக எகிப்து இன்று வெளிப்படையாகத் தெரிவித்தது

இஸ்ரவேல் பிரதமர் ஷாமிர் இதற்கமைய மரநாட்டை விரும்பவில்லை சம்பந்தப்பட்ட அரபு நாடுகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதே அவரது கருத்தாகும் (ஒ)

போதைவஸ்து பிடிபட்டது

பாங்கொக், மார்ச் 3

பாங்கொக்கில் 1லட்சத்து 50 ஆயிரம் டாலர் பெறுமதியான 40கிலோ கிராம் போதைவஸ்து பிடிபட்டுள்ளது

இதனை கடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர்.

தாய்லாந்தில் 100 கிலோகிராமிற்கும் அதிகமான போதை வஸ்தை கடத்தினால் மரணதண்டனை விதிக்கப்படும். (ஒ)

சீனாவில்

தலைமைப் பீடத்தை மாற்றுவதற்குச் சதியாம்

ஜனாதிபதி டன் சியா சொல்கிறார்

பீக்கிங் மார்ச் 3

சீனாவில் தலைமைப் பீட மாற்றத்திற்கான போராட்டம் ஒன்று நடத்துவதற்குச் சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தது, இதன் பின்னணியிலேயே மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் ஊக்குவிக்கப் பட்டன.

இவ்வாறு சீன ஜனாதிபதி டன் சியா பிங் தெரிவித்தார்

அமெரிக்க உள்நாட்டமைச்சர் ஜோர்ச் சூல்ட்ஸை வரவேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்

கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழுவில் பொதுச் செயலாளராகப் பணியுரிந்து பதவி நீக்கம் பெற்ற கூ-யா-வாங் தலைமையில் இத்திட்டம் இருந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதனை முறியடிக்கும் முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது சிறையில் உள்ள கூ-யா-வாங் அளித்த வாக்குமூலத்தில் சீன கம்யூனிஸ்ட் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்குத் திட்டம் தீட்டியதாகவும் அதற்காக மாணவரை கிளர்ச்சியில் ஈடுபடச் செய்ததாகவும் தெரிவித்ததுடன் சீனாவிற்கு மேற்கு நாடுகளின் அரசியல் அமைப்பு முறையே உகந்தது என தாம் கருதுவதாகவும் தெரிவித்தாராம்

இவ்வாறு சீன ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஒ)

நேதாஜி மறைவு பற்றி மீண்டும் விசாரணை

புதுடில்லி, மார்ச் 3

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் மறைவில் உள்ள 'மர்மம்' குறித்து இந்திய அரசு மீண்டும் விசாரணை நடத்த உள்ளது.

ராஜஸ்தான் உயர் நீதி மன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து இந்திய மத்திய அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

நேதாஜியின் நெருங்கிய காவலான நந்தலால் சர்மா, நேதாஜி ஆராய்ச்சி நிறுவனத் தலைவராக இருக்கிறார்

இவர் அண்மையில் ராஜஸ்தான் உயர் நீதி மன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

சுதந்திர போராட்டத் தலைவரான நேதாஜியின் மறைவில் நிலவும் 'மர்மம்' குறித்து நிறந்த மனதுடன் விசாரணை நடத்து!! —

இப்படி உயர் நீதி மன்றம் இந்திய மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது

இதைத் தொடர்ந்து இந்திய வெளியுறவு அமைச்சில் மேலதிகச் செயலாளர், நேதாஜி ஆராய்ச்சி நிறுவன அமைப்பாளர் பேராசிரியர் வி.எல். தலேராக்கு அனுப்பிய தந்தியில், விசாரணைகளை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது– என்று தெரிவித்திருக்கின்றார். (ஒ – எ)

ஒலிம்பிக் பந்தயம்

தென் கொரியாவில் 'எய்ட்ஸ்' கட்டுப்பாடு

சியோல், மார்ச் 3

அடுத்த வருடம் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் தென் கொரியாவில் நடைபெற இருப்பதால் எய்ட்ஸ் நோய்க்கு எதிரான சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விளையாட்டுப் போட்டிகளை பார்வையிடுவதற்காக செல்லவிருக்கும் ஆயிரக்கணக்கானவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. (ஒ)

ரஷ்ய யோசனைக்கு பலத்த வரவேற்பு

லண்டன், மார்ச் 3

ஐரோப்பாவிலிருந்து நடுத்தர ஏவுகணைகளை அகற்ற உடனடியாக தனி ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்வதென்ற ரஷ்யாவின் யோசனையை அமெரிக்காவுடன் சேர்ந்து பல மேற்கு ஐரோப்பிய நாடுகளும் வரவேற்றுள்ளன

இந்த யோசனை ஒரு சிறந்த நடவடிக்கை என பிரிட்டிஷ் அரசு தெரிவித்தது. இது முக்கியமானதும் ஆக்கபூர்வமானதும் என பெல்ஜியம் கருத்து வெளியிட்டது.

ஆயுதக் கட்டுப்பாடு குறித்து இப்பொழுது ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடத்தி வரும் அமெரிக்க ரஷ்ய பிரதிநிதிகள் இந்த யோசனையை ஆராய்வதற்காக இன்று சிறப்புக் கூட்டம் ஒன்றை நடத்துகின்றார்கள், (ஒ)

வெளி உலகில்

தமிழாராய்ச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டது

கோலாலம்பூர், மார்ச் 3

மலேஷியாவில் தமிழ் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

வரும் மே மாதம் 20ஆம் திகதியிலிருந்து 24ஆம் திகதி வரை கோலாலம்பூரில் நடைபெறவிருந்த ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

அனேகமாக ஜூன் முதல் வாரத்தில் இம் மாநாடு கோலாலம்பூரில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவீன சமுதாய வளர்ச்சிக்கு தமிழின் பங்கு என்பது இந்த மாநாட்டின் பிரதான கருத்தாக அமையும்,

இம் மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து 600 பிரதிநிதிகளும், இலங்கை, தாய்லாந்து, இந்தோனேஷியா, இலிங்கிலாந்து, அமெரிக்கா, மொரிஷியஸ், பிஜி உட்பட வேறு பல நாடுகளிலிருந்தும் பல பிரதிநிதிகளும் கலந்துகொள்வர். (ஒ)

எகிப்தில் தஞ்சம்

கெய்ரோ, மார்ச் 3

லிபியாவிற்கு சொந்தமான இராணுய விமானம் ஒன்று எகிப்திற்கு கடத்தப்பட்டுள்ளதுடன் அதில் பயணம் செய்த ஆறு இராணுவத்தினரும் தமக்கு அரசியல் தஞ்சம் தருமாறு எகிப்திடம் கோரியுள்ளனர். (ஒ)

இலட்சம் அர்ச்சனைகள் இன்றுகாணும் துர்க்கை

ஆலயங்களே பக்தி நெறியை வளர்க்கும் வாயில்களாகும். பல்லாயிரம் ஆண்டுகளாக மனத்துணிவையிட தெய்வ நம்பிக்கையை உயர்த்தி தெய்வ வழிபாட்டைதமதுஉயிராகப் போற்றி வாழ்பவர்கள் தமிழர்கள். தமிழரின் நாகரிக வளர்ச்சி சமயத்தின் வளர்ச்சியிலே ஆரம்பமானது.

கடற்கரையிலும்– வயல் வெளியிலும்– காட்டிலும்– மலையிலும் இறைவனைக் கண்ட மக்கள் கூட்டம் படிப்படியாக நிலையான ஆலயங்களை அமைக்கத் தொடங்கியது. அவற்றினைச் சார்ந்து, நினைக்க நெஞ்சும்– வாழ்ந்த வாயும்– நாழ்ந்தத் செவியும் நந்த மாமெரும் சந்நிதிய வழிபடுதலே மனிதபிறப்பின் மேலான கருமம் எனக் கொண்டனர்.

இதன் பயனாக பல ஆலயங்கள் தோன்றினும்– வாழ் குடாநாட்டின் மாந்திரங்கள் தமிழர்கள் வாழும் மண் எங்கும் புகழ்பூத்த ஆலயமான தெல்லிபூர் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்று பெருவிழா.

உலக மாதாவாகிய ஆதிபராசக்தி– சங்கு சக்கரம் ஏந்திய திருக்கரங்களோடு– விஷ்ணு துர்க்கையாக– கருணையே வடிவமாக– சிரத்தின் மேல் கரம், குவித்து. தேம்பி அழும் எமது இனத்தின் துயர் துடைக்க, தன்னிடம் சரண்புகும் அடியார்கள் வேண்டிய வரம் தந்தருளும் தனிப் பெரும் தேவியான– துர்க்கைக்கு இன்று 4ஆம்திகதி புதன்கிழமை முதல் பத்தாம் நாளைக்கு தொடர்ச்சியாக இலட்சார்ச்சனை நடைபெற்று (14-3-87) சனிக்கிழமை கலசாபிஷேகம் நிகழவுள்ளது.

நல்ல முறையில் அழகான கட்டடங்களும் விக்கிரகங்களும் அமைத்து விக்கிரகத்திற்கு தெய்வீகச்சக்தியைக் கொடுக்க வேண்டும்.

துர்க்கையை நினைத்தாலே போதும். அவள் எல்லோரதும் பயத்தைப் போக்குகின்றாள். கபன்தமாக உள்ளவர் நினைத்தால் நல்ல புத்தியைத் தருகின்றாள். ஏழ்மை, துக்கம், பயம் இவைகளைப் போக்க வல்லவர் அவளைவிட வேறு யாருளர்?

சபா. புஷ்பநாதன்

பொய்யாமொழி

குறள்:

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

பொருள்:

தாம் இன்புறுவதற்குக் காரணமான கலவியால் உலகமும் ஒன்றுபுரிவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக்கலவியையே) விரும்புவர்.

செய்திக்கொத்து

கிளிநொச்சி வரை ரயிலைக் கொண்டு வருவார்களாம்

கிளிநொச்சி, மார்ச் 4

"புலிகள் வாலமுக்கினைத் தரித்தாலும் கிளிநொச்சி வரைநாம் ரயிலைக் கொண்டு வருவோம்"

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகளிடம் கிளிநொச்சி முகாம் சிப்பாய்கள் மேற்கண்டவாறு தெரிவிக்கின்றனராம் (இ-76)

பூசை நடத்த கோருகிறது இராணுவம்

கிளிநொச்சி, மார்ச். 4

கிளிநொச்சி சந்தைக் ஆலய பூசகரைச் சந்தித்த சிப்பாய்கள் ஆலயப் பூசைகள் யாவும் எதிர் வரும் 15ஆம் திகதிக்குள் ஆரம்பிக்க வேண்டுமெனவும் தவறின் தாம் பூசை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனராம்.

இந்த ஆலயம் ஜூன் 14ஆம் திகதி முதல் பூசிப்பப்படுகின்றது. (இ-76)

தொண்டர் ஆசிரியர் உண்ணாவிரதம்

மட்டக்களப்பு, மார்ச் 4

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க கோரி இம் மாதம் 9 ஆம் திகதி கல்வித் திணைக்கள முன்றலில் உண்ணாவிரதம் இருப்பார்கள்.

இம் மாவட்ட பாடசாலைகளில் சுமார் 1500 பேர் 3 வருட காலமாகத் தொண்டராசிரியராக கடமையாற்றுகிறார்கள். (இ-21)

ஆரைப்பற்றை சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

மட்டக்களப்பு ஆரைப்பற்றை கிராமம் சிப்பாய்களினால் சுற்றிவளைக்கப்பட்டு 500க்கும் அதிகமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

தப்பி ஓட முயன்றார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவர் சிப்பாய்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சனிக்கிழமை இச் சம்பவம் நடைபெற்றது. கைதானோர் [illegible] இராணுவ முகாமுக்கு [illegible] கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் சிலர் விடுதலை செய்யப்பட்டனர். (இ-10)

150 பேர் பூஸாவுக்கு

மட்டக்களப்பு, மார்ச் 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பாகங்களிலும் கைது செய்யப்பட்டு கல்லடிமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நீதிரவாத சந்தேக நபர்களில் மேலும் 150 பேர் விசாரணைக்காக பூஸா அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

4 பஸ்களில் இவர்கள் பலத்த பாதுகாப்புடன் அம்பாறை வழியாகக் கொண்டு செல்லப்பட்டனர். (இ-21)

நுளம்புகள் தொல்லை

நெடுங்கேணி, மார்ச் 4

நெடுங்கேணியில் மலேரியோய் தொளிக்கும் வேலைகள் நடைபெறுவதால் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது மலேரியோய் பவுடர் இல்லாதே இதற்குக் காரணம். (இ-108)

எரிபொருள் விலை உயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணத்தில் எரிபொருள்களின் விலைகள் திடீரென அதிகரித்தன. (இ-10)

புல்மோட்டை வரை பஸ் சேவை நீடிப்பு

திருகோணமலை, மார்ச் 4

திருகோணமலை நகரில் இருந்து வடக்கேயான உள்ளூர் பஸ் சேவை புல்மோட்டை வரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ-எ-150)

சமய நிகழ்ச்சிகளில்

அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நல்லூர் பரமகுருநாதர் சிவ அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை தொடக்கம் அடுத்த செவ்வாய் வரை நடைபெறும். (இ-எ)

இலங்கை அரசின் 6 அம்சப் பதில்:

சரியான விளக்கத்துடன் காமினி டில்லி வரவேண்டும்

இந்து நாளிதழில் ரெட்டி

புதுடில்லி, மார்ச் 3

இலங்கை அரசின் ஆறு அம்சப் பதிலில் காணப்படும் இடைவெளிகளை நிரப்பக் கூடிய சரியான விளக்கங்களை ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடமிருந்து பெற்றுக் கொண்டு அமைச்சர் காமினி திஸாநாயகா புதுடில்லி வரவேண்டும்.

இவையே இந்திய அரசு விரும்புவதாக பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதி இருக்கின்றார்.

இலங்கை அரசின் பதில் இந்திய அதிகாரிகள் நன்கு பரிசீலனை செய்தார். பதிலில் காணப்படும் ஆறு அம்சங்களுக்கு தமிழர் வட்டாரங்களினால் முற்றாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை.

ஒரே சமயத்தில் இலங்கை அரசும் தமிழ்ப் போராளி அமைப்புக்களும் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்தி [illegible] மாகாணங்களில் [illegible] முகாம்களில் கொண்டுவர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது

பேச்சுக்களுக்கு முன் ஜெனீவாவை இது இடம் பெற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசு நிறுத்தும் வரை எதிர்த்தாக்குதல்களையும் சிவில் நிர்வாகம் மேற்கொள்வதையும் தமிழ்ப்போராளிகள் நிறுத்துவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது [illegible] நியாயமானதாகவே இருக்கின்றது.

திரு ரெட்டி 'இந்து' வில் முன்கண்டவாறு எழுதியிருக்கிறார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/- மட்டுமே!
★ ProcessingFree(நெகடிவ்செய்யஇலவசம்)
★ வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஈவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

உதயன்

04 - 03 - 1987 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஈவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

விந்தாரம்

வாரும் முரளியார். எப்பிடி விசேஷம் ஏதாவது இருக்கே? சொல்லேன் அப்பா. உனக்குத் தெரிஞ்சதை மற்றவைக்கும் சொல்லுவம்.

ஒ கடையிலை சீனி இல்லை என்டு நாலு சொல்லுகினம். நாலு எதிலே கடைக்குப் போறது எல்லாம் வீட்டுக்காரரோடை தான். நேற்றுப் பிக்னோமரவுணுக்கை ஒரு கடைக்குப் போனுவாம். சீனி இல்லை. கால் ருத்தல் தான் தரலாம். நாலு ரூபா என்டு கடைக்காரப் பெண்மணியே கதை சொல்லுவாம். அடுத்த கடையிலை கால் ருத்தல் தான் [illegible] கூடியது விலை முன்டே முக்கால். ஆனால் பத்து ரூபாவும் மாத்த ஏலாது அச்சொட்டாச் சில்லறை வேணும் என்டை நிபந்தனை. அடுத்த கடையிலை போய் அவசரமாத் தேவை கலமில்லாத ஆளுக்கு என்டு சொன்னதாலை கால் ருத்தல் மட்டும் முன்டே முக்காலுக்குக் குடுத்தினமாம்.

வரித்தாரி சங்கம் கேட்டாக் என்ன, கோரிக்கை விட்டால் என்ன சீனி, மாவுக்குப் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பது உண்மை

உந்த விஷயத்தை விட்டிலை மனுஷி எனக்குச் சொல்லிக் கொண்டிருக்கையிலை அடுத்த வீட்டு பெஷன்காரர் அதிலும் வரச் சரியாய் இருந்தது.

அவர் ஒழுக்காய்ப் பென்ஷன் எடுத்தாலே வாழ்வைச் சிலவை அல்லும் பகலும் திட்டித் தீர்க்கிறவர் இந்த மாதப் பென்ஷன் கிடையாது என்டதும் தலையிலை கையை வைச்சுக் கொண்டு வந்தார்.

வருஷப் பிறப்புக்கும் ஒழுங்காய்ப் பென்ஷன் கிடையாது என்டதை இன்னைக்குப் பேப்பரிலை பார்த்ததும் மனுஷன் மயக்கம் போட்டு விழுந்தாலும் விழுந்து விடுவார்!

கிராமப்புறத்திலை இருந்து வந்தவர் இன்னொரு பரிதாபக் கதையைச் சொன்னார். உணவு முத்திரைக்குச் சாமான் எடுக்கிற ஒரு குடும்பத்தலைவர், அயலவர் ஒருவரிடம் தெரிந்தவர் ஒருவரிடம் போய் 50 ரூபா பெறுமதியான உணவு முத்திரையைக் குடுத்து பத்து ரூபா வாருதல் தாச் சொல்லிக் கேட்டாராம். பிள்ளைகளுக்குப் பாண் வாங்கிக் குடுக்க...!

இந்த அவலம்எல்லாம் எங்கே அரசாங்கத்துக்குத் தெரியப் போகுது. இனப்பிரச்சினையைத் தான் தீர்க்க முடியவில்லை என்டாக் மற்றப் போராட்டப் பிரச்சினையையும் தீர்க்காமல் இழுத்தடிக்குதே! பழக்க தோஷம் போலை அதுக்கு என்ன, அது இழுத்தடிக்க அடிக்க தமிழன் அழிஞ்சு கொண்டிருக்கிறான்!

இராணுவத் தாக்குதலில் தமிழச் சிவிலியன்கள் கொல்லப்படுவதாகக் கதறுவது நவரு என்டு பாதுகாப்பு அதிகாரி ஒருவர் சொன்னதாய் அரசாங்கவானுகுமல் பத்திரிகை ஒன்டிலை எழுதியிருக்கு. நாலு வருஷத்திலை ஆக ஆயிரத்துச் சொச்சப் தமிழ் பொதுமக்கள் தான் இராணுவ நடவடிக்கையாலை செத்தவையாம் மற்றது எல்லாம் போராளியளாம்!

போராளியலும் பொதுசனம்போலைத்தானுகடுத்திருக்கினம். அதாலை போராளியள் செத்தாலும் பொது மக்கள் என்டு கூட்டணி பொய்க் கணக்குக் காட்டுவதாக அந்தப் பாதுகாப்பு அதிகாரியும் வானுகுமலும் சேர்ந்து புதுக் கணக்குப் போடுகினம்.

தாங்கள் பொதுமக்களைச் சுட்டுப் போட்டு அல்லது ஷெல் அடிச்சுச் சாக்காட்டிப் போட்டு போராளியளைப் போரில் கொன்று சாதனை புரிஞ்சதாக அறிக்கை எழுதுமாம்போலை என்டு நினைச்சிட்டினமாக்கும்

இந்தியாவும் மத்தியஸ்தத்திலை இருந்து விலகி விட்டது இனித் தாங்கள் நினைச்சமாதிரி ஒரு இராணுவத் தாக்குதல் நடத்தலாம் என்டு யோசிக்கினம் போலை

இந்தியாவை மேவித் தான் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேணும் என்டு அமெரிக்கா, அரசாங்கத்துக்கு புத்தி கூறினதாயும் ஒரு தகவல் காதிலை விழுந்தது. வேறெண்டுமில்லை, கொட்டியையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி விடுகிற அமெரிக்கவிலை வாட்டுத் தெரியாத வைக்கு ஏதோ பெரிய விஷயமாய் இருக்கும்!

—கொண்டோடி

செயலக மறியலால் குடாநாட்டின் உணவு விநியோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4 மக்கள் வங்கிக் கிளையில் நகைகள் அடகு வைத்தோரி நடத்தும் செயலக மறியற் போராட்டத்தால் யாழ் குடாநாட்டுக்குள் அரிசி யாவிய உணவு விநியோகம் பாதிக்கப்படுகின்றது இதனால் லட்சக் கணக்கான மக்கள் பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண தேசிய கூட்டுறவுச் சபைக் கூட்டத்தி தெரிவிக்கப்பட்டது.

சபைத் தலைவர் திரு சி சிவமகராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தி ப நோக்கு சங்கத் தலைவர்கள், செயலாளர்கள், உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்

கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களாவன;

★ ப நோ.கூ சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான அரிசி, மா, சீனி, எண்பன சாங்கேசன் துறை எஞ்சியத்திலிருந்தே போதியளவு கையிருப்பு உள்ளன. செயலக மறியற் போராட்டத்தால் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி மூலம் இந்த உணவுப் பொருள்களை சங்கங்கள் பெறமுடியாதுள்ளது.

★ தற்போது மாத ஆரம்ப தினங்களாகையால் உணவு முத்திரை மூலம் உணவுப் பொருள்களைப் பெறுவோர் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளனர். ஒரு லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து லட்சம் பேர் உணவு முத்திரை உணவுகளையும்–

பதின்மூன்று ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த எண்பத்தையாயிரம் மீனவர்கள் மீனவ நிவாரண உணவுகளையும்–

திருமலையைச் சேர்ந்த ஆயிரத்து இருநூறு அகதிகள் தமது நிவாரண உணவுப் பொருள்களையும் இதுவரை சங்கங்கள் மூலம் பெற்று வந்தனர். இவர்களில் பலர் நற்போதைய மறியற் போராட்டத்தால் பட்டினி நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

★ இந்நிலையைச் சாட்டாக வைத்து வியாபாரிகள் உணவுப் பொருள்களைப் பதுக்குவதுடன் விலை கூட்டியும் விற்கத் தொடங்கி விட்டார்கள்

இவ்வாறு அக்கூட்டத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. (இ–5)

27 தமிழர் - - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தான் தமிழர்கள் அன்று அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்படி அவர் சொன்னார்,

இதற்கிடையில் 64 இலங்கைத் தமிழரின் அகதிகள் அந்தஸ்துக் கோரும் விண்ணப்பங்களை பிரிட்டிஷ் குடியுரிமை ஆலோசனைக் கவுன்சிலுக்குச் சமர்ப்பிக்க பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு சம்மதித்து உள்ளது

64 தமிழர் சம்பந்தப்பட்ட வழக்கு இன்று புதன்கிழமை லண்டன் மேல் நீதிமன்றம் ஒன்றின் முன் விசாரணைக்கு வர உள்ளது

இந்தருணத்தில் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் இதனை அறிவித்தார் என்று பி. பி. சி. நேற்று இரவு அறிவித்தது.

பிரிட்டிஷ் குடியுரிமை ஆலோசனைச் சபைக்கு அறிவிக்காமலே இந்த தமிழரை நாடு கடத்த அரசாங்கம் முன்னர் நடவடிக்கை எடுத்தது அதை எதிர்த்தே நீதி மன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது

இலங்கைத் தமிழரின் விண்ணப்பங்களை மீண்டும் பரிசீலனை செய்து உண்மையான அகதிகளுக்கு அகதிகள் அந்தஸ்து வழங்க பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு தயாராக இருப்பதாகவும் பி. பி. சி. மேலும் தெரிவித்தது. (இ–எ)

விமானப்படை வீரர் தற்கொலை

திருகோணமலை, மார்ச் 4

சீனன் வாடி விமானப் படை முகாமில் பணியாற்றி வந்த எஸ் டபிளியு ஜனக பெரேரா (வயது 23) மனவிரக்தி காரணமாக தனக்குத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் (இ–எ–150)

ஏபரல- - -

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

பஞ்சவிக்கம், இது விஷயத்தில் யாழ் செயலக அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவும்படி கேட்டுக்கொள்கிறார். (இ–எ)

தமிழீழ ஒலி ஒளி சேவை: ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் பற்றி வெள்ளி அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 4

தமிழீழ ஒலி ஒளி சேவை கட்டுப்பாட்டுச் சபையிடம் அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பித்த ஒளிபரப்பு சேவையாளர்கள், மினிசினிமா உரிமையாளர்கள், வீடியோ சென்டர் உரிமையாளர்கள், கிளைப்பர சேவையாளர்கள் ஆகியோரது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் வெள்ளிக் கிழமை பகல் 12மணிக்கு நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் அறிவிக்கப்படும்

எவ்வேவிண்ணப்பித்த சகல ஒளிபரப்பாளர்களும், வீடியோ சென்டர், மினிசினிமாக்கள் விளம்பர சேவையாளர்கள் அனைவரும் இக் கூட்டத்துக்கு தவறாது கலந்து கொள்ளும்படி தமிழீழ ஒலி ஒளி கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது (இ–10)

ஆஸ்திரேலியாவில் லலித் கூறியது 200மணி நேரம் வரை கூட்டணியுடன் பேசிஉள்ளோம் புலிகள்தான் தீர்வுக்கு முட்டுக்கட்டை

அதிகாரப் பகிர்வு குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் 200 மணித்தியாலங்களுக்கு மேலாக இலங்கை அரசு பேச்சுக்களை நடத்தியுள்ளது ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும்தான் தீர்வை விரும்பவில்லை, அதுதான் இன்றுள்ள பிரச்சினைக்கு முக்கிய காரணம்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தமது ஆஸ்திரேலிய விஜயத்தின்போது நியூசவுத் வேல்ஸில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அமைச்சர் லலித் மேலும்சொன்னதாவது;

இராணுவ நடவடிக்கை மூலம் எமது பிரதேசத்தை மீட்டு எடுக்கலாம்; ஆனால் மக்களின் உள்ளங்களை வெல்ல முடியாது.

எமது பக்கக் கதையைக் கூறத்தான், நான் ஆஸ்திரேலியா வந்திருக்கிறேன். எமது கதை தான் உண்மையானது.

பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அது [illegible] நாளி இப்பதவியில் தொடர்ந்திருக்கலாம்.

இப்படி அமைச்சர் லலித் சொன்னார்.

நான்காவது டெஸ்ட் ஆரம்பம்

புதுடில்லி, மார்ச் 4

இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று புதன்கிழமை அதிகாலை நாதில் ஆரம்பமாகிறது.

இதுவரை நடைபெற்ற சென்னை, கல்கத்தா, ஜெய்ப்பூர் டெஸ்ட் போட்டிகள் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ–எ)

கொழும்பில்---

(1–ம்பக்கத் தொடர்ச்சி)

டாது.

பிரயாணிகளின் பாதுகாப்புக் கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் யாழ்ப்பாணத்தி [illegible] கொழும்பு செல்லும் பஸ் [illegible] மணிக்கே புறப்பட்டுச் செல்லும். (இ–10)

யாழ்ப்பாணக் கல்லூரி இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 4

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி, கல்லூரிக் ஸ்தாபகரோதயாக் கல்லூரி அணியை இன்னிங்ஸ் வித்தியாசத்திலி தோற்கடித்தது

வட்டுக்கோட்டை 'பிக்நெல்' விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 305 ஓட்டங்களைப் பெற்றது

ஆர். குலசிங்கம் 58 ஓட்டங்களையும் சயந்த குமார் 49 ஓட்டங்களையும் ஹரஸ்லி 33 ஓட்டங்களையும், என். நித்தியரஞ்சன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்

பதிலுக்கு ஸ்தாபகரோதயா அணி 71 ஓட்டங்களுடன் இழந்தது.

இராமச்சந்திரன் 20 ஓட்டங்களையும் குகதாசன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

கிருஷ்ணலிங்கம் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், எஸ். நித்தியரஞ்சன் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 134 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக ஆடிய ஸ்தாபகரோதயா அணி மீண்டும் 71 ஓட்டங்களில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சரவணபவானந்தன் 26 ஓட்டங்களையும் கரேஸ்குமார் 18 ஓட்டங்களையும், ரெமிக்சன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ். நித்தியரஞ்சன் 27 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், விஜயகுமார் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கிருஷ்ணலிங்கம் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (இ–7)

பாடசாலைகளின் கிரிக்கெட் மோதல்கள்

யாழ். மத்திய கல்லூரி 7 விக்கெட்டுகளினால் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 4

மாவிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கெதிராக கனேகூர்வ கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணி 7 விக்கெட்டுகளினால் வெற்றி யீட்டியது.

செம் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மாவிப்பாய் இந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது.

தர்சன் 36 ஓட்டங்களையும், துஷ்யந்தன் 23 ஓட்டங்களையும், வீரசிங்கம் 19 ஓட்டங்களையும் பெற்றனர்

பந்து வீச்சில் ரெரி மகான் 13 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி அணி 87 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது

செல்வச்சந்திரன் 17 ஓட்டங்களையும், விக்னேஸ்வரன் 16 ஓட்டங்களையும், ரமேஷ் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

புவனேந்திரா 44 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், தர்சன் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்,

மாவிப்பாய் இந்து அணி 65 ஓட்டங்களுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸை இழந்தது

வீரசிங்கம் 24 ஓட்டங்களையும், தர்சன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்

சிவச்சந்திரன் 7 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், ரெரி மகான் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிக்குத் தேவையான 85 ஓட்டங்களை 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து பெற்றுக்கொண்டது

விவேகானந்தன் 30 ஓட்டங்களையும், கலா வண்ணன் 27 ஓட்டங்களையும், ரெரி மகான் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் பெற்றனர். (இ–7)

பிரயல கிரிக்கெட் வீரர் தெரிவு

முதல் வார வாக்களிப்பு முடிவுகள்
(நூறு வாக்குகளுக்கு மேல் பெற்றவர்கள்)

பெயர்	பெற்ற வாக்குகள்
1. பொ. பிரபாகரன், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)	369
2. க. டெரிமகான், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)	332
3. ஆர். பி சௌந்தரநாதன், (செம் பற்றிக்ஸ் கல்லூரி)	313
4. ஏ. வாசீகன், (செம். ஜோன்ஸ் கல்லூரி)	295
5. எஸ். ரவிக்குமார், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி).	286
6. எஸ். நேசகுமார், (செம். ஜோன்ஸ் கல்லூரி)	271
7. றிச்சாட் மோகனதாஸ், (செம் பற்றிக்ஸ் கல்லூரி)	265
8. கே. பிரேம்நாத், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)	262
9. எஸ். நித்தியரஞ்சன், (யாழ்ப்பாணக் கல்லூரி)	132
10. மோகுலன், (கொக்குவில் இந்துக் கல்லூரி)	113
11. புவனேந்திரகுமார், (மாவிப்பாய் இந்துக் கல்லூரி)	110

★ இவ் வாரம் முன்னணியில் திகழும் கிரிக்கெட் வீரரை தெரிவு செய்த அதிர்ஷ்டசாலிகளில் இருவர்:-

1. திரு. சீ பாலசுப்பிரமணியம், 71, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
2. திரு. க. நாகேந்திரன், 548, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

இவர்களுக்கான பரிசுக் காசோலை தலா ரூபா 50/- காலக்கிரமத்தில் நேரடியாக அனுப்பிவைக்கப்படும்.

— கிரிக்கெட் போட்டிக் குழு

WE WAIT TO WELCOME YOU
Green Peking Palace
R. S. R.
Cool Drinks ★ Hot Drinks
Short Eats & Lunch
Assuring you of our personal attention and our very best services always.
Open from 9-30 a.m. to 11-30 p.m.
69G, 4th Cross Street.
JAFFNA.

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜோ விஸ்ராஸ் லியன்ஸ்
1987
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி
வீரரின் பெயர் .....
கல்லூரி .....
வாக்காளர் பெயர் .....
விலாசம் .....
ஒப்பம் .....

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் அச்சகத்தாராக வாங்கிய அச்சகத்தில் அச்சிடு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 04 – 03 – 1987 தொலைபேசி இல. 24805 22075

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 /N /87. Telephone 24805, 22075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org